Tamil | தமிழ்

# மார்பகப் புற்றுநோயின் அறிகுறிகள் மற்றும் அறிகுறிகள்

மார்பகப் புற்றுநோய் எந்த நேரத்திலும் உருவாகலாம். 50 முதல் 74 வயது வரை ஒவ்வொரு 2 வருடங்களுக்கு ஒருமுறை மார்பகப் பரிசோதனை (மேமோகிராம்) செய்துகொள்வதுடன், மார்பகப் பாதுகாப்பு குறித்து விழிப்புடன் இருப்பதும் முக்கியம்.

உங்கள் மார்பகங்களின் இயல்பான தோற்றம் மற்றும் உணர்வை நீங்கள் அறிந்து கொள்ளுமாறு நாங்கள் பரிந்துரைக்கிறோம். ஏதேனும் அறிகுறிகள் அல்லது மார்பக மாற்றங்கள் உங்கள் மருத்துவரால் பரிசோதிக்கப்பட வேண்டும். அவர்கள் உங்களை ஒரு நோயறிதல் படமெடுத்தல் (diagnostic imaging) சேவைக்கு பரிந்துரைக்கலாம்.

மேலும் சோதனைகளில் பின்வருவன அடங்கும்:

- உங்கள் மார்பகங்களின் உடல்ரீதியான பரிசோதனை
- 3D மேமோகிராம் (மார்பக ஊடுகதிர்படம்)
- அல்ட்ராசவுண்ட்
- தேவைப்படக்கூடிய பிற சோதனைகள்

உங்கள் மார்பகங்களில் ஏதேனும் மாற்றங்களைக் கவனித்தால், விரைவில் உங்கள் மருத்துவரைப் பார்க்கவும். BreastScreen Victoria-வைப் பார்வையிட வேண்டாம்.

## கவனிக்க வேண்டிய அடையாளங்கள் மற்றும் அறிகுறிகள்:



மார்பகங்கள் அல்லது தோலின் அளவு அல்லது வடிவத்தில் ஏற்படும் மாற்றம், சுருக்கம், குழி விழுதல், சிவத்தல் அல்லது மென்மை போன்றவை.



முலைக்காம்பில் ஏற்படும் மாற்றங்கள், அதாவது மேலோடு, சிவத்தல் அல்லது தலைகீழாக மாறுதல் (உள்ளே இழுக்கப்படுதல்).



அழுத்தாமல் ஏற்படும் முலைக்காம்பு வெளியேற்றம் (திரவம்).



ஒரு புதிய கட்டி அல்லது கட்டிபோன்ற – குறிப்பாக அது ஒரே ஒரு மார்பகத்தில் மட்டும் இருந்தால் – அல்லது நிணநீர் முனை வீக்கம் போன்ற கை/அக்குள் மாற்றம்.



நீங்காத ஒரு அசாதாரண வலி.

**breastscreen.org.au** இல் முன்பதிவு செய்யுங்கள் அல்லது **13 20 50** ஐ அழைக்கவும்

விக்டோரிய அரசாங்கத்தின் ஆதரவை BreastScreen Victoria பாராட்டுகிறது.

கேட்கும் திறன் அல்லது பேச்சு குறைபாடுகள் **TTY 13 36 77**

மொழிபெயர்ப்பாளர் ஆதரவு **13 14 50**



© 2023 BreastScreen Victoria. அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை

**ஆகஸ்ட் 2023** FS6/0823